**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 440/2020 P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரசீப்கான் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேரராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். 06.01.2019ம் தேதி 01.30 மணியளவில் மரியநேசம் என்பவர் சிகிட்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

2. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்துப்பார்த்த போது இடது கால் பாதத்தில் 3, 4, 5 விரல்களில் எலும்பு முறிவு காணப்பட்டது. மேற்படி முறிவுகளை மறுநாள் 07.01.2019ம் தேதி கம்பி போட்டு அறுவை சிகிட்சை மேற்கொள்ளப்பட்டது. 14.01.2019ம் தேதி அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். **அந்த காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எக்ஸ்ரே ரிப்போர்ட் அ.சா. ஆ. 3, 4, 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. நான் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜராகியுள்ளேன். அ.சா.ஆ.2 ஆவணமானது என்னால் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.2 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 முதல் 5 ஆவணம் எனது மருத்துவமனையில் எடுக்கப்பட்டது என்பது துலங்காது என்றால் சரியல்ல, மேற்படி எக்ஸ்ரேயில் ஓரத்தில் துலங்குகிறது.

2. அ.சா.ஆ.2, காயச்சான்றிதழில் காயம் ஏற்பட்ட நேரமாக 06.01.2019, 01.30 P.M மணிக்கு காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி காயச்சான்றிதழ் நான் வழங்கவில்லை, குளச்சல் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டது. மேற்படி அ.சா.ஆ.2 ஆவணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு எந்த சிகிட்சையும் மேற்கொள்ளவில்லை என்றாலும், அவர் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அ.சாஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் தவறி விழுவதனாலும் ஏற்படக்கூடும் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் அவசர சிகிட்சைப் பிரிவில் கொடுத்திருப்பார்கள். பொதுவாக மேற்படி விபத்து சம்மந்தமான விஷயங்களுக்கு உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை– முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.